No. of Printed Pages : **12**

**6642**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

## வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

1. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு :

(அ) 1930 (ஆ) 1920 (இ) 1935 (ஈ) 1925

Communist Party of India was formed in the year :

(a) 1930 (b) 1920 (c) 1935 (d) 1925

2. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது ?

(அ) திலகர் (ஆ) மகாத்மா காந்தியடிகள்

(இ) பி.பி. வாடியா (ஈ) மதன்மோகன் மாளவியா

Who founded the Banaras Hindu University ?

(a) Tilak (b) Mahatma Gandhi

(c) B.P. Wadia (d) Madan Mohan Malaviya

3. "How India Wrought for Freedom" என்ற புத்தகத்தின் ஆசிரியர் :

(அ) லாலா லஜபதி ராய் (ஆ) அன்னிபெசன்ட்

(இ) C.R. தாஸ் (ஈ) திலகர்

The author of the Book "How India Wrought for Freedom" was ________.

(a) Lala Lajpat Rai (b) Annie Besant

(c) C.R. Das (d) Tilak

4. **கூற்று** : இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.

**காரணம்** : அகழிப் போர்முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.

(அ) **கூற்று** சரி, **காரணம்** தவறு.

(ஆ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி. **காரணம் கூற்றை** விளக்குகிறது.

(இ) **கூற்று** தவறு, **காரணம்** சரி.

(ஈ) **கூற்று** மற்றும் **காரணம்** சரி, ஆனால் **காரணம் கூற்றை** விளக்கவில்லை.

**Assertion (A) :** The methods of warfare changed during the Second World War.

**Reason (R) :** Trench warfare had given way to aerial bombing.

(a) **(A)** is correct but **(R)** is wrong.

(b) Both **(A)** and **(R)** are correct, **(R)** explains **(A)**.

(c) **(A)** is wrong but **(R)** is correct.

(d) Both **(A)** and **(R)** are correct, **(R)** does not explain **(A)**.



https://www.tamilnaduboard.com

5. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது ?

(அ) ஃபெரோஸ்ஷா மேத்தா (ஆ) அரவிந்த கோஷ்

(இ) லாலா லஜபதி ராய் (ஈ) தாதாபாய் நௌரோஜி

Whose name was proposed as President by the Militant Nationalists for the Surat session of the Congress ?

(a) Pherozesha Mehta (b) Aurobindo Ghose

(c) Lala Lajpat Rai (d) Dadabhai Naoroji

6. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர் :

(அ) A.O. ஹியூம் (ஆ) சுபாஷ் சந்திர போஸ்

(இ) பால கங்காதர திலகர் (ஈ) காந்தியடிகள்

The Indian National Congress was founded by :

(a) A.O. Hume (b) Subash Chandra Bose

(c) Bala Gangadhar Tilak (d) Gandhi

7. கிரிப்ஸ் தூதுக்குழு _________ ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்தது.

(அ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஆ) வேவல் பிரபு

(இ) இர்வின் பிரபு (ஈ) லின்லித்கோ பிரபு

The Cripps Mission visited India during the regime of :

(a) Lord Mountbatten (b) Lord Wavell

(c) Lord Irwin (d) Lord Linlithgow



https://www.tamilnaduboard.com

8. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை :

(i) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்

(ii) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்

(iii) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்

(iv) அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்

(அ) (i) மற்றும் (iv) (ஆ) (i) மற்றும் (ii)

(இ) (iii) மற்றும் (iv) (ஈ) (ii) மற்றும் (iii)

Non-Cooperation Movement included :

(i) boycott of government schools and colleges

(ii) return of government conferred titles

(iii) protest observing fasts

(iv) conducting underground movements against the Government

(a) (i) and (iv) (b) (i) and (ii)

(c) (iii) and (iv) (d) (ii) and (iii)

9. ஐ.நா. சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வே லை _________ -ஐ சேர்ந்தவராவார்.

(அ) சிங்கப்பூர் (ஆ) பர்மா (இ) நார்வே (ஈ) ஜப்பான்

Trygve Lie, the first Secretary General of the UNO, belonged to _________.

(a) Singapore (b) Burma (c) Norway (d) Japan

10. 1923 –இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ்-ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன ?

(அ) சுதந்திரா கட்சி (ஆ) சுயராஜ்ய கட்சி

(இ) கம்யூனிஸ்ட் கட்சி (ஈ) கதார் கட்சி

What was the name of the party formed by Motilal Nehru and C.R. Das in 1923 ?

(a) Swatantra Party (b) Swaraj Party

(c) Communist Party (d) Ghadar Party



https://www.tamilnaduboard.com

**11.** கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது ?

(அ) புவியியல் கண்டுபிடிப்பு (ஆ) மறுமலர்ச்சி

(இ) வர்த்தகப் புரட்சி (ஈ) சமயச் சீர்திருத்தம்

Which one of the following had relegated religion to a subordinate place ?

(a) Geographical Discovery (b) Renaissance

(c) Commercial Revolution (d) Religious Reformation

**12.** பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.

(i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு

(ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்

(iii) மௌண்ட்பேட்டன் திட்டம்

(அ) (iii), (ii), (i) (ஆ) (ii), (i), (iii)

(இ) (ii), (iii), (i) (ஈ) (i), (ii), (iii)

Arrange the following in chronological order.

(i) Atlee's announcement on India's Independence

(ii) Interim Government under the leadership of Nehru

(iii) Lord Mountbatten Plan

(a) (iii), (ii), (i) (b) (ii), (i), (iii)

(c) (ii), (iii), (i) (d) (i), (ii), (iii)

**13.** _________ க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

(அ) இரண்டாம் ஆங்கிலோ - சீனப் போர்

(ஆ) ரஷ்ய - ஜப்பானிய போர்

(இ) சீன - ஜப்பானிய போர்

(ஈ) இரண்டாம் அபினி போர்

Shimonoseki Treaty was signed after the _________.

(a) Second Anglo-Chinese War

(b) Russio-Japanese War

(c) Sino-Japanese War

(d) Second Opium War



https://www.tamilnaduboard.com

14. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது ?

(அ) 100 (ஆ) 200 (இ) 75 (ஈ) 150

Mahatma Gandhi National Rural Employment Guarantee Act (MGNREGA) provided ________ days work for an individual.

(a) 100 (b) 200 (c) 75 (d) 150

15. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார் ?

(அ) 1917 (ஆ) 1915 (இ) 1918 (ஈ) 1916

When did Gandhi return to India from South Africa ?

(a) 1917 (b) 1915 (c) 1918 (d) 1916

16. ஜெர்மானிய ஒருங்கிணைவை அடைவதற்கு 'இரத்தமும், இரும்பும்' என்ற கொள்கையை கையாண்டவர் ________.

(அ) அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல்

(ஆ) க்யூசுப் கரிபால்டி

(இ) மூன்றாம் நெப்போலியன்

(ஈ) ஆட்டோ வான் பிஸ்மார்க்

________ adopted a 'Blood and Iron' Policy to achieve the unification of Germany.

(a) King Victor Emmanuel II

(b) Giuseppe Garibaldi

(c) Napoleon III

(d) Otto von Bismarck

17. "இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான சிற்பி" என அழைக்கப்படுபவர் யார் ?

(அ) லால் பகதூர் சாஸ்திரி (ஆ) இராஜாஜி

(இ) வல்லபாய் படேல் (ஈ) ஜவஹர்லால் நேரு

Who was called the "Prime Architect of India's Foreign Policy" ?

(a) Lal Bahadur Sastri (b) Rajaji

(c) Vallabai Patel (d) Jawaharlal Nehru



https://www.tamilnaduboard.com

**18.** இந்திய தேசிய இராணுவப்படை மீதான விசாரணை நடைபெற்ற இடம் :

(அ) வைஸ்ரீகல் லாட்ஜ், சிம்லா (ஆ) செங்கோட்டை, புதுடெல்லி

(இ) சிங்கப்பூர் (ஈ) பினாங்

The Indian National Army Trials took place in :

(a) Viceregal Lodge, Simla (b) Red Fort, New Delhi

(c) Singapore (d) Penang

**19.** 1937 -இல் நடைபெற்ற தேர்தலில் _________ காங்கிரஸ் வெற்றி பெற்றது.

(அ) 5 மாகாணங்களில் (ஆ) 12 மாகாணங்களில்

(இ) 8 மாகாணங்களில் (ஈ) 7 மாகாணங்களில்

In the 1937 elections, Congress won in :

(a) 5 Provinces (b) 12 Provinces

(c) 8 Provinces (d) 7 Provinces

**20.** பிரெஞ்சுப் புரட்சியின் காலம் _________.

(அ) 1756 - 1763 (ஆ) 1775 - 1783

(இ) 1689 - 1755 (ஈ) 1789 - 1795

The period of the French Revolution is :

(a) 1756 - 1763 (b) 1775 - 1783

(c) 1689 - 1755 (d) 1789 - 1795

## பகுதி - II / PART - II

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயம்** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **Compulsory**.

**21.** தொடக்க கால முக்கிய இந்திய தேசியவாதிகளைக் கண்டறிக.

Identify the prominent early Indian Nationalists.

**22.** மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார் ?

How did Mahadev Govind Ranade explain the idea of Swadeshi ?



https://www.tamilnaduboard.com

**23.** பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை குறித்து எழுதுக.

Write about Bahishkrit Hitakarini Sabha.

**24.** ''இரண்டாவது லாகூர் சதி'' என்றறியப்படும் நிகழ்வு யாது ?

Which incident was known as the "Second Lahore Conspiracy Case" ?

**25.** ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.

State the main features of August Offer.

**26.** ஜே வி பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன ?

What was the essence of the JVP Committee's recommendations ?

**27.** நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக.

Give an account of the conditions of the Indian Economy at the time of Independence.

**28.** இத்தாலியை, ''வெறும் பூகோள வெளிப்பாடே'' என மெட்டர்னிக் ஏன் கூறினார் ?

Why was Italy described as "a mere geographical expression" by Metternich ?

**29.** ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுக.

Point out the importance of Battle of Jutland.

**30.** ஹிட்லர் பற்றி எழுதுக.

Write about Hitler.

**A**

https://www.tamilnaduboard.com

## பகுதி - III / PART - III

குறிப்பு : பின்வரும் வினாக்களில் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.

Point out the role played by Press in creating Nationalist consciousness in British India.

**32.** தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்.

Discuss the twin objectives of the Home Rule League.

**33.** ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.

Write a note on the Jallianwala Bagh Massacre.

**34.** சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.

Discuss the proposals of Sir Strafford Cripps.

**35.** இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை ?

What are the hallmarks of our Indian Constitution ?

**36.** இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை ?

What were the outcomes of Green Revolution in India ?

**37.** 1492 -இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.

Write about the voyage of Columbus in 1492.



https://www.tamilnaduboard.com

**38.** சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக எழுதுக.

Give a brief account of Suez Canal Crisis.

**39.** இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

Highlight the important results of the Second World War.

**40.** அணிசேரா இயக்கம் (NAM) பற்றி எழுதுக.

Write about the Non-Alignment Movement (NAM).

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக-பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

அல்லது

(ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

(a) Examine the socio-economic causes for the rise of Nationalism in British India.

**OR**

(b) Highlight the important provisions of Lucknow Pact.

**42.** (அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

அல்லது

(ஆ) 1919 - 1939 -ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

(a) Write about the role played by V.O. Chidambaram in Indian National Movement.

**OR**

(b) Write an account of the industrial development in Colonial India during 1919 - 1939.



https://www.tamilnaduboard.com

43. (அ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன ?

அல்லது

(ஆ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

(a) What were the impacts of 'Divide and Rule' Policy of British on Indian Nationalism ?

**OR**

(b) Estimate the role of Mahathma Gandhi in the Indian Freedom Struggle.

44. (அ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதன் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

அல்லது

(ஆ) இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

(a) Trace the different stages in the reorganization of Indian States from 1920 to 1956.

**OR**

(b) Examine the development of Institutions of Scientific Research and Technology after India's Independence.

45. (அ) பிரெஞ்சு புரட்சிக்கான காரணங்களை விவாதிக்கவும்.

அல்லது

(ஆ) முதல் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டு எழுதுக.

(a) Discuss the causes for the French Revolution.

**OR**

(b) Make a comparative analysis of Common and Varying features in the First World War and Second World War.



https://www.tamilnaduboard.com

46. (அ) இரண்டாம் உலகப் போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

அல்லது

(ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

(i) மீரட்

(ii) லக்னோ

(iii) கான்பூர்

(iv) சம்பரான்

(v) பூனா

(a) The seeds for the Second World War were sowed in the Treaty of Versailles. Discuss with reasons.

**OR**

(b) Mark the following places where Indian National Movement took place on the outline map of India.

(i) Meerut

(ii) Lucknow

(iii) Kanpur

(iv) Champaran

(v) Poona

47. (அ) போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியை, குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கு குறித்து விவரிக்கவும்.

அல்லது

(ஆ) 1900 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

(a) Sketch the political career of Boris Yeltsin, focussing on his role in the collapse of Soviet Union.

**OR**

(b) Draw a time-line from 1900 to 1950 and mark any five important events of Indian National Movement.

-oOo-



https://www.tamilnaduboard.com